செ.வெ.எண்:37 நாள்:26.01.2017

# அரியலூரில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில் 63 பயனாளிகளுக்கு ரூ.52 இலட்சத்து 43 ஆயிரத்து 710 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (26.01.2017) வழங்கினார்.

அரியலூர் மாவட்ட விளையாட்டரங்கில் "குடியரசு தினவிழா" மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் விளையாட்டு திடலில் இன்று (26.01.2017) காலை **8.01** மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் **தேசியக் கொடியை** ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். தொடர்ச்சியாக, காவல்துறையினர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

இந்திய சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கும், அவர்களது வாரிசுதாரர்களுக்கும் கைத்தறி ஆடைகளை அணிவித்து கௌரவித்தார்.

மாவட்ட காவல்துறையின் சார்பில் வீரதீர செயல் புரிந்த 10 காவல்துறையினருக்கு பதக்கங்களையும், அரசுத்துறையில் சிறப்பாக பணியாற்றிய 29 அரசு அலுவலர்களுக்கு பதக்கங்களையும், தொழில் வணிகத்துறை மாவட்ட தொழில் மையம் மூலமாக **இன்கோசர்வ்** பிரிவின் சிறந்த ஊட்டி தேயிலை விற்பனை செய்த 3 நியாயவிலைக்கடை விற்பனையாளர்களுக்கு காசோலைகளையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில், முன்னாள் படைவீரர் நலத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு வருடாந்திர பராமரிப்பு மானியமாக **ரூ.75,000** மதிப்பிலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு **ரூ.29,000** மதிப்பிலும், வேளாண் துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு **ரூ.50,000** மதிப்பிலும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு 10 மற்றும் 12ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கு ஊக்கதொகை **ரூ.22,800** மதிப்பிலும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 16 பயனாளிகளுக்கு 10 மற்றும் 12ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கு ஊக்கதொகை **ரூ.41,000** மதிப்பிலும், தாட்கோ திட்டத்தின் மூலம் 3 பயனாளிகளுக்கு **ரூ.10,27,310** மதிப்பிலும், கூட்டுறவுத்துறையின் சார்பில் 12 பயனாளிகளுக்கு **ரூ.30,54,600** மதிப்பிலும், புதுவாழ்வுத்திட்டம் சார்பில் 7 பயனாளிகளுக்கு **ரூ.1 இலட்சத்து 20 ஆயிரம்** மதிப்பிலும், மகளிர் திட்டத்தின் சார்பில் 10 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு **ரூ.8 இலட்சத்து 24 ஆயிரம்** மதிப்பிலும் ஆக மொத்தம் 63 பயனாளிகளுக்கு **ரூ.52 இலட்சத்து 43 ஆயிரத்து** 710 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்.

மேலும், அரியலூர் மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி சார்பில் தேசப்பற்று நடனமும், அஸ்தினாபுரம் மாதிரி பள்ளி சார்பில் தேசப்பற்று நடனமும், கோவிந்தபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி சார்பில் நாட்டுப்பற்று நடனமும், ஜெயங்கொண்டம் பாத்திமா பெண்கள் மேல்நிலைப்பள்ளி சார்பில் தேசப்பற்று நடனமும், வாலாஜாநகரம் பெரியார் ஈ.வே.ரா ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சார்பில் தேசப்பற்று நடனமும், செந்துறை அரசு மேல்நிலைப்பள்ளி (மகளிர்) சார்பில் தேசப்பற்று நடனமும், கீழப்பழூர் சுவாமி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி சார்பில் நாட்டுப்புற விழிப்புணர்வு நடன கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது. இக்கலைநிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப.,** அவர்கள் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அனில்குமார் கிரி இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) ரெங்கராஜன், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திருமதி.யோகேஸ்வரி, கோட்டாட்சியர்கள் (அரியலூர்) திரு.மோகனராஜன், (உடையார்பாளையம்) திருமதி.டினாகுமாரி, முதன்மை கல்வி அலுவலர் திரு.மாரிமுத்து, வட்டாட்சியர் திரு.முத்துகிருஷ்ணன், துணை ஆட்சியர்கள் மற்றும் கல்வித்துறை, வருவாய்துறை, வளர்ச்சிதுறை, வேளாண் துறை, தோட்டக்கலைத்துறை, காவல்துறை ஆகியோர் கலந்துகொண்டனர்.

## செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.